**இஸ்லாமிய சமய மன்றம் (சிங்கப்பூர்)**
**வெள்ளிக்கிழமைப் பிரசங்கம்**
**18 மார்ச் 2016 / 09 ஜமாதியுல் ஆகிர் 1437**

# நீதத்தை நிலை நாட்டி, நமது சகோதரர்களின் உரிமைகளை நிறைவேற்றுவோமாக!

اَلْحَمْدُ للهِ الْغَنِيِّ الْحَمِيْدِ وَأَشْهَدُ أَنْ لَا إِلَهَ إِلاَّ اللهُ وَحْدَهُ لاَ شَرِيْكَ لَه، وَهُوَ عَلَى كُلِّ شَيْءٍ شَهِيْد، وَأَشْهَدُ أَنَّ سَيِّدَنَا مُحَمَّدًا عَبْدُهُ وَرَسُوْلُه المَبْعُوثُ بِالرَّحْمَةِ وَالْقَوْلِ السَّدِيْد، اَللّٰهُمَّ صَلِّ عَلَى سَيِّدِنَا مُحَمَّدٍ وَعَلَى آلِهِ وَصَحْبِهِ وَسَلِّمْ تَسْلِيْمًا كَثِيْرًا. أَمَّا بَعْدُ، فَيَا عِبَادَ اللهِ اتَّقُوْا اللهَ حَقَّ تُقَاتِهِ وَلَا تَمُوْتُنَّ إِلَّا وَأَنْتُمْ مُسْلِمُوْنَ.

வெள்ளிக்கிழமையில் ஒன்று கூடியுள்ள அருள்மிக்க ஜமாஅத்தார்களே!

அல்லாஹ்வின் அனைத்து படைப்புகளிடமும் நீதமாக நடந்து கொள்ள வேண்டுமென கடந்த வாரத்தில் நினைவூட்டப்பட்டோம். அவ்வாறு செய்தால், அல்லாஹ் சுப்ஹானஹு வதஆலா நமது உள்ளத்தில் ”தக்வா” எனும் இறை பக்தியை அதிகரிப்பான். அல்லாஹ்வின் கட்டளைகளை நிறைவேற்றுவதிலும், அவன் நமக்குத் தடை செய்துள்ள விஷயங்களைத் தவிர்ந்து கொள்வதிலும் அல்லாஹ் நமக்கு உதவி செய்வான். ஆமீன். யாரப்பல் ஆலமீன்.

ஜமாஅத்தார்களே!

இறைத்தூதர் முஹம்மது(ஸல்) அவர்கள் இறைத்தூதராக நியமிக்கப்படும் முன்பாக நடைபெற்ற ஒரு சம்பவத்தை இங்கு குறிப்பிட விரும்புகிறேன். எமன் நாட்டைச் சேர்ந்த வியாபாரிகளில் ஒருவர் மக்காவிலிருந்த குறைஷிகுல வியாபாரி ஒருவருக்கு சில பொருட்களை விற்றார். குறைஷிகுல வியாபாரியோ அப்பொருட்களைப் பெற்ற பின், அதற்காக அவர் கொடுப்பதாக வாக்களித்திருந்த விலையை எமன் நாட்டு வியாபாரிக்குக் கொடுக்க மறுத்து விட்டார். எமன் நாட்டு வியாபாரி இவ்விஷயத்தை மக்காவிலிருந்த குறைஷிகுலத் தலைவர்களுக்குத் தெரிவித்து, இவ்விஷயத்தில் நீதத்தை நிலைநாட்டி, தனக்கு உதவுமாறு கேட்டுக் கொண்டார். இதனை அறிந்த குறைஷித் தலைவர்கள், அநீதமிழைப்பவர்கள் நமது குடும்பத்தைச் சேர்ந்தவர்களாக இருப்பினும் அநீதமிழைக்கப் பட்டவருக்கே நாம் உதவி செய்ய வேண்டும் என்று நியாயமாக ஒப்பந்தம் செய்து அதில் கையெழுத்திட்டார்கள். அவ்வாறு கையெழுத்திட்டவர்களில் இறைத்தூதர் முஹம்மது(ஸல்) அவர்களும் ஒருவர் ஆவார். அப்போது இறைத்தூதர்(ஸல்) அவர்கள் குறைஷிகுல மக்களால் ”அல்-அமீன்” (நம்பிக்கைக்குரியவர்) எனப் போற்றப்பட்டு வந்தார்கள். இறைத்தூதர்(ஸல்) அவர்கள் ”ரசூலாக” (இறைத்தூதராக) நியமிக்கப்பட்ட பின் மேற்கண்ட ஒப்பந்தத்தைப் புகழ்ந்து பின்வருமாறு கூறினார்கள்:

”இந்த ஒப்பந்தத்தில் கலந்து கொண்டு கையெழுத்திட்டதானது, எனக்கு ஒரு சிகப்பு ஒட்டகம் கிடைப்பதை விட மிகவும் மகிழ்ச்சியாக இருந்தது. இஸ்லாம் மீண்டும் அறிமுகம் செய்யப்பட்ட இக்காலத்தில் இது போன்ற ஒப்பந்தம் மீண்டும் நடைபெறும் எனில் அதில் நான் நிச்சயம் கலந்து

கொள்வேன்" என்றார்கள். (ஹதீதைப் பதிவு செய்து அறிவிப்பவர்: இமாம் பைஹகீ ரஹ்)

மேற்கண்ட ஒப்பந்தம் "ஹிஜ்புல் ஃபுளூல்" (மரியாதைக்குரியவர்களின் ஒப்பந்தம்) எனவும் பிரபலமாக அறியப்படுகிறது.

இவ்வாறுதான், இஸ்லாம் மற்றும் இறைத்தூதர்(ஸல்) அவர்கள் மனிதர்களுக்கிடையே நீதி, நேர்மையின் கொள்கைகளைக் கடைப்பிடித் தார்கள். மற்றவர்களுடனான நமது அனைத்து தொடர்புகளிலும் நீதி, நேர்மையை நாம் கடைப்பிடிக்க வேண்டுமென அல்லாஹ் சுப்ஹானஹு வதஆலா விரும்புகிறான். அநீதமிழைப்பவர் நமது இனம், நமது மார்க்கம், ஏன்? நமது சொந்த குடும்ப உறுப்பினர்களாக இருந்தாலும் சரி அநீதமிழைக்கப்பட்டவருக்கே நாம் உதவி செய்ய வேண்டும். அல்லாஹ் சுப்ஹானஹு வதஆலா திருக்குர்ஆனின் "அன்னிஸாவு' எனும் அத்தியாயத்தின் 135-வது வசனத்தில் பின்வருமாறு நமக்கு நினைவூட்டுகிறான்:

يَٰٓأَيُّهَا ٱلَّذِينَ ءَامَنُواْ كُونُواْ قَوَّٰمِينَ بِٱلۡقِسۡطِ شُهَدَآءَ لِلَّهِ وَلَوۡ عَلَىٰٓ أَنفُسِكُمۡ أَوِ ٱلۡوَٰلِدَيۡنِ وَٱلۡأَقۡرَبِينَۚ إِن يَكُنۡ غَنِيًّا أَوۡ فَقِيرٗا فَٱللَّهُ أَوۡلَىٰ بِهِمَاۖ فَلَا تَتَّبِعُواْ ٱلۡهَوَىٰٓ أَن تَعۡدِلُواْۚ وَإِن تَلۡوُۥٓاْ أَوۡ تُعۡرِضُواْ فَإِنَّ ٱللَّهَ كَانَ بِمَا تَعۡمَلُونَ خَبِيرٗا

பொருள்: முஃமின்களே! நீங்கள் நீதியின்மீது நிலைத்திருப்பவர்களாக இருங்கள்; (நீதமாக நடப்பது) உங்களுக்கோ அல்லது (உங்கள்) பெற்றோருக்கோ அல்லது நெருங்கிய உறவினருக்கோ விரோதமாக இருப்பினும் (நீதத்தை நிலை நாட்டி) அல்லாஹ்வுக்காகவே சாட்சி

கூறுபவர்களாகவும் இருங்கள்; (நீங்கள் யாருக்காக சாட்சியம் கூறுகிறீர்களோ) அவர்கள் செல்வந்தர்களாக இருந்தாலும் ஏழைகளாக இருந்தாலும் (உண்மையான சாட்சியம் கூறுங்கள்); ஏனெனில் அல்லாஹ் அவ்விருவரையும் காப்பதற்கு அருகதையுடையவன்; எனவே நியாயம் வழங்குவதில் மன இச்சையைப் பின்பற்றி விடாதீர்கள்; மேலும் நீங்கள் மாற்றிக் கூறினாலும் அல்லது (சாட்சி கூறுவதைப்) புறக்கணித்தாலும், நிச்சயமாக அல்லாஹ் நீங்கள் செய்வதையெல்லாம் நன்கு அறிந்தவனாகவே இருக்கின்றான்.

ஜமாஅத்தார்களே!

மேற்கண்ட வசனம், நீதத்தைப் பற்றிப் பிடிப்பதன் அவசியத்தை நமக்கு நினைவூட்டுகிறது. சிலர் மீது நாம் கொண்டுள்ள அன்பாகிறது நீதமாக நடப்பதை விட்டும் நம்மைத் தடுப்பதாக இருக்கக் கூடாது எனவும் சுட்டிக் காட்டுகிறது. நாம் முதலாளிகளாக இருந்தால், நமது தொழிலாளிகள் நமது இனம் அல்லது மார்க்கத்தைச் சேர்ந்தவராக இருப்பினும், அவர்கள் ஏதாவது தவறுகள் செய்தால், அல்லது மற்றவர்களுக்கும் தமக்கும் பாதிப்பை ஏற்படுத்தும் ஏதாவதொரு குற்றச் செயலில் ஈடுபட்டால், அவர்களை அத்தவறுகள் மற்றும் அக்குற்றச் செயல்களை விட்டும் பாதுகாப்பது நமது கடமையாகும். எவ்வாறு மற்றவர்கள் நமக்கு அநீதம் செய்யக் கூடாது என நாம் விரும்புகிறோமோ அவ்வாறே மற்றவர்களுக்கும் அநீதம் நிகழக் கூடாது என நாம் விரும்ப வேண்டும். உண்மையில், ஒருவரை அவரது தீய எண்ணங்கள் மற்றும் தீய செயல்களிலிருந்து தடுப்பதானது, அவருக்கு உதவி செய்வதாகவே

இருக்கும். ரசூலுல்லாஹி(ஸல்) அவர்கள் நவின்ற பின்வரும் ஹதீதை நாம் நினைவில் கொள்ள வேண்டும்:

"உங்களின் சகோதரர் அநீதமிழைப்பவராக இருந்தாலும் அநீதமிழைக்கப் படுபவராக இருந்தாலும் அவருக்கு உதவுங்கள். அவர் அநீதமிழைப்பவராக இருந்தால் அநீதம் செய்வதிலிருந்து அவரைத் தடுத்து, அவருக்கு உதவுங்கள். அவர் அநீதமிழைக்கப்பட்டவராக இருந்தால், அநீதத்திலிருந்து விடுதலை பெற அவருக்கு உதவி செய்யுங்கள்" (ஹதீதைப் பதிவு செய்து அறிவிப்பவர்: இமாம் புகாரி ரஹ்)

இன்று சிலர், தமது மார்க்கத்தைச் சேர்ந்தவர்களை அல்லது நண்பர்களை அவர்கள் தவறு செய்திருந்த போதிலும் அவர்களைப் பாதுகாப்பவர்களாக இருப்பதைக் காண்கிறோம். இது கவலைக்குரிய விஷயமாகும். உதாரணமாக, ஒருவர், தனது நண்பர் மற்றவரை அவமானப்படுத்துவதைப் பார்த்தால், மார்க்க விஷயத்தில் மாற்றுக் கருத்துடையவரைத் துன்புறுத்துவதாகக் கண்டால், அந்நிலையில், அவ்வாறு செய்யக் கூடாதென அந்த நண்பருக்கு நினைவூட்டுவதற்குப் பதிலாக, அந்த நண்பரைப் பாதுகாத்து அவரது கருத்தைப் பின்பற்றுபவராக இருக்கின்றார். இது வருந்தத்தக்க விஷயமாகும். இஸ்லாம் இவ்வாறு நமக்குப் போதிக்கவில்லை. நாம் நமது மனோ இச்சைகளைப் பின்பற்றக் கூடாது. நமது நண்பர் தவறிழைத்தால் அவரைத் திருத்துவதன் மூலம் அவருக்கு நாம் உதவ வேண்டும்.

வெள்ளிக்கிழமையில் ஒன்று கூடியுள்ள ஜமாஅத்தார்களே!

நாம் மனிதர்கள் அனைவரிடமும் நீதமாக நடந்து கொள்வதோடு, அனைவருக்கும் கிருபை காட்ட வேண்டும். மற்றவர்கள் நம்மிடம் அன்பாக

நடந்து கொள்ள வேண்டுமென விரும்புகின்ற நாம், நாமும் அவர்களிடம் அன்பாக நடக்க முயல வேண்டும். நபி(ஸல்) அவர்கள் ஹதீதில் நவின்றுள்ளார்கள்:

"உங்களுக்கு விரும்புவதை உங்கள் சகோதரனுக்கும் நீங்கள் விரும்பாத வரை நீங்கள் உண்மையான இறை நம்பிக்கையாளர்களாக ஆக முடியாது" (ஹதீதைப் பதிவு செய்து அறிவிப்பவர்கள்: இமாம் புகாரி ரஹ், இமாம் முஸ்லிம் ரஹ்)

நாம் தாழ்ந்த நிலையிலும், உதவிகள் தேவைப்படும் நிலையிலும் இருக்கும் போது, உதவி செய்யப்பட வேண்டுமென்றும் ஆர்வமூட்டப்பட வேண்டுமென்றும் நாம் விரும்புவோமல்லவா? எனவே தான், முஸ்லிம்களாகிய நாம் பேராபத்துகளால் பாதிக்கப்பட்டவர்களுக்கு உதவ முன் வர வேண்டும். இவ்விஷயத்தில் இனம், மதம், நாடு போன்ற எவ்வித வித்தியாசமும் பார்க்காமல் அனைவருக்கும் உதவ வேண்டும். எந்த ஆபத்துகளால் யார் பாதிக்கபட்டாலும் சரி, பிரான்ஸ், துருக்கி, ஐவரி கோஸ்ட் போன்ற எந்த நாட்டில் தாக்குதல்களால் சோதனைகளை எதிர்கொள்பவர்களாக இருந்தாலும் சரி அனைவருக்கும் நாம் உதவ முன் வர வேண்டும். எல்லாம் வல்ல அல்லாஹ் சுப்ஹானஹு வதஆலா அமைதி, சாந்தி சமாதானத்தை, வளத்தை அம்மக்களுக்கு ஏற்படுத்த வேண்டுமென்றும், நம்மிடம் காணப்படும் அந்த நல்ல நிலைகளைத் தொடர்ந்து பாதுகாக்க வேண்டுமென்றும் நாம் பிரார்த்திக்கின்றோம்.

அவ்வாறு செய்வதன் மூலம், அல்லாஹ் சுப்ஹானஹு வதஆலா, நமது சிந்தனைகளிலும் செயல்களிலும் மேற்கொண்டு நாம் நீதமாக நடக்க வேண்டுமென்ற உணர்வை ஏற்படுத்துவான். அல்லாஹ்வின் மீது

அதிகமான "தக்வா" (பக்தி) உடையவர்களாக, அவனது திருப்தியைப் பெற்றவர்களாக நம்மை ஆக்குவான். ஆமீன். யாரப்பல் ஆலமீன்.

بَارَكَ اللهُ لِي وَلَكُمْ فِي الْقُرْآنِ الْعَظِيْمِ، وَنَفَعَنِي وَإِيَّاكُمْ بِمَا فِيْهِ مِنَ الآيَاتِ وَالذِّكْرِ الْحَكِيْمِ، وَتَقَبَّلَ مِنِّي وَمِنْكُمْ تِلاَوَتَهُ إِنَّهُ هُوَ السَّمِيْعُ الْعَلِيْمُ، أَقُوْلُ قَوْلِي هَذَا وَأَسْتَغْفِرُ اللهَ الْعَظِيْمَ لِي وَلَكُمْ، وَلِسَائِرِ الْمُسْلِمِيْنَ وَالْمُسْلِمَاتِ، وَالْمُؤْمِنِيْنَ وَالْمُؤْمِنَاتِ، فَاسْتَغْفِرُوهُ فَيَا فَوْزَ الْمُسْتَغْفِرِيْنَ وَيَا نَجَاةَ التَّائِبِيْنَ.